https://t.me/Padasalai www.Padasalai.Net
https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in

**11** ஆம் வகுப்பு

# உடனடித் தேர்வு ஜூன் – 2023

## பொருளியல் (விடைகளுடன்)

பதிவு எண் | | | | | | |

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள்: 90

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** சமநிலை விலை என்பது அந்த விலையில் :
(அ) எல்லாம் விற்கப்படுகிறது
(ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
(இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
(ஈ) மிகைத் தேவை பூஜ்ஜியம்

**2.** பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க :
(அ) ஆடம்பரப் பண்டங்கள் (ஆ) வசதிப் பண்டங்கள்
(இ) அத்தியாவசியப் பண்டங்கள்
(ஈ) விவசாயப் பொருட்கள்

**3.** பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சினை :
(அ) எண்ணற்ற விருப்பங்கள்
(ஆ) அளவற்ற வளங்கள்
(இ) பற்றாக்குறை
(ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி

**4.** நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர் :
(அ) ஆடம் ஸ்மித் (ஆ) மார்ஷல்
(இ) ராபின்ஸ் (ஈ) ரிக்கார்டோ

**5.** எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?
(அ) உழைப்பாளர் (ஆ) நிலம்
(இ) தொழிலமைப்போர் (ஈ) மூலதனம்

**6.** செலவு சார்புகள், ________ சார்புகள் எனவும் அழைக்கப்படுகிறது.
(அ) உற்பத்தி (ஆ) முதலீடு
(இ) தேவை (ஈ) நுகர்வு

**7.** ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு.
(அ) மாறும் செலவு (ஆ) மாறாச் செலவு
(இ) இறுதி நிலைச் செலவு (ஈ) மொத்தச் செலவு

**8.** முற்றுரிமையில் MR வளைகோடு ________ வளைகோட்டிற்கு கீழிருக்கும்.
(அ) TR (ஆ) MC
(இ) AR (ஈ) AC

**9.** பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது ________ உடன் தொடர்புடையது.
(அ) உற்பத்திக் காரணிகள் (ஆ) தனிநபர்
(இ) நிறுவனங்கள் (ஈ) வணிகர்கள்

**10.** ________ ஐ பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும்.
(அ) மூலதனம் (ஆ) உழைப்பாளி
(இ) நிலம் (ஈ) அமைப்பு

**11.** கர்நாடகத்தின் முக்கிய தங்கச் சுரங்கப்பகுதி ________.
(அ) கோலார் (ஆ) இராமகிரி
(இ) அனந்தபூர் (ஈ) குல்பர்ஹா

**12.** இரயத்துவாரி முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம் :
(அ) கேரளா (ஆ) வங்காளம்
(இ) தமிழ்நாடு (ஈ) மகாராஷ்டிரா

**13.** பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் ________.
(அ) 1992 - 1997 (ஆ) 2002 - 2007
(இ) 2007 - 2012 (ஈ) 1997 - 2002

**14.** ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு :
(அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல்
(ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி
(இ) குறைந்த அளவு மக்கள் தொகை
(ஈ) ஏற்றத்தாழ்வு குறைவு



www.Padasalai.Net
enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/Padasalai_Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**15.** ஊரகத் தொழிற்சாலைக்கான உதாரணம் :
(அ) சர்க்கரை ஆலைத் தொழில்
(ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
(இ) சிமெண்ட் தொழில்
(ஈ) காகிதத் தொழில்

**16.** கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது :
(அ) தமிழ்நாட்டின் நுழைவாயில் – தூத்துக்குடி
(ஆ) வீட்டு ஜவுளி தயாரிப்பு – ஈரோடு
(இ) எஃகு நகரம் – சேலம்
(ஈ) பம்ப் நகரம் – கோயம்புத்தூர்

**17.** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம் :
(அ) I (ஆ) II
(இ) III (ஈ) IV

**18.** கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல?
(அ) குறை அளிப்பு
(ஆ) இயங்கும் தன்மையுடையது
(இ) பல வகைப்படும்
(ஈ) இயற்கையின் கொடை

**19.** __________ இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும்.
(அ) கணிதம் மற்றும் பொருளாதாரம்
(ஆ) பொரளாதாரம் மற்றும் புள்ளியியல்
(இ) பொருளாதாரம் மற்றும் சமன்பாடுகள்
(ஈ) வரைபடங்கள் மற்றும் பொருளாதாரம்

**20.** பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் அமல்படுத்தப்பட்ட நாள் _________
(அ) 2017, ஜூலை 1 ந்தேதி
(ஆ) 2016, ஜூலை 1 ந்தேதி
(இ) 2017, ஜனவரி 1 ந்தேதி
(ஈ) 2016, ஜனவரி 1 ந்தேதி

## பகுதி - II

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 **-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**[7 × 2 = 14]**

**21.** பண்டங்கள் என்றால் என்ன?
**22.** விருப்பங்களை வகைப்படுத்துக.
**23.** வருவாயை வரையறுக்கவும்.
**24.** நீர்மை விருப்பத்தின் பொருளைக் கூறுக.
**25.** முதலீட்டை திரும்பப் பெறுதல் – வரையறுக்கவும்.
**26.** குறுங்கடன் என்றால் என்ன?
**27.** தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை?
**28.** இயற்கை வளங்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.
**29.** ஊரக மின்மயமாக்கல் – வரையறுக்கவும்.
**30.** தமிழ்நாட்டிற்கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக் குறிப்பிடுக.

## பகுதி - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40**-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**[7 × 3 = 21]**

**31.** பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?
**32.** சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
**33.** உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.
**34.** தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரிக்கவும்.
**35.** நிறைவுப் போட்டி மற்றும் முற்றுரிமை போட்டியின் ஒற்றுமையைக் குறிப்பிடுக.
**36.** கூலியின் பல்வேறு வகைகளைப் பட்டியலிடுக.
**37.** PQLI என்றால் என்ன?
**38.** குளிர்பதன சேமிப்புக் கிடங்கு பற்றி குறிப்பு எழுதுக.
**39.** கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.
**40.** ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகள் யாவை?

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**[7 × 5 = 35]**

**41.** (அ) நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.
(அல்லது)
(ஆ) இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்தவத்தை விவரிக்கவும்.

**42.** (அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை?
(அல்லது)
(ஆ) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய பொருளாதாரம் பற்றி விவாதிக்கவும்.

**43.** (அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரிக்கவும்.
(அல்லது)
(ஆ) 2015-2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி–இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

www.Padasalai.Net

https://t.me/Padasalai ... www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**44.** (அ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

**45.** (அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரிக்கவும்.

**46.** (அ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) பி.ஆர். அம்பேத்கர் பன்முகத்திறன் கொண்டவர் – நிரூபிக்கவும்.

**47.** (அ) வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளிக் கொணர்க.

❖ ❖ ❖

# விடைகள்

## பகுதி - I

1. (இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
2. (ஈ) விவசாயப் பொருட்கள்
3. (இ) பற்றாக்குறை
4. (ஆ) மார்ஷல்
5. (இ) தொழிலமைப்போர்
6. (அ) உற்பத்தி
7. (இ) இறுதி நிலைச் செலவு
8. (இ) AR
9. (அ) உற்பத்திக் காரணிகள்
10. (இ) நிலம்
11. (அ) கோலார்
12. (இ) தமிழ்நாடு
13. (ஆ) 2002 - 2007
14. (அ) வேளாண்மையைச் சார்ந்திருத்தல்
15. (ஆ) பாய் தயாரிக்கும் தொழில்
16. (ஆ) வீட்டு ஜவுளி தயாரிப்பு – ஈரோடு
17. (அ) I
18. (ஆ) இயங்கும் தன்மையுடையது
19. (அ) கணிதம் மற்றும் பொருளாதாரம்
20. (அ) 2017, ஜூலை 1 ந்தேதி

## பகுதி - II

**21.**
- ♦ மனித விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் பொருளியலில் பண்டங்களாக கருதப்படுகின்றன.
- ♦ பண்டங்கள் தொட்டுணரக்கூடியவை, உருவ வடிவமுடையவை, அதன் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும். மாற்றக் கூடியவை, பரிமாற்ற மதிப்பு உடையவை.

**22.** விருப்பங்களின் வகைகள் மூன்று.
- ♦ இன்றியமையாத விருப்பம்.
- ♦ வசதிக்கான விருப்பம்.
- ♦ ஆடம்பரத்திற்கான விருப்பம்.

**23.**
- ♦ ஒரு விற்பனையாளர் தன் பண்ட பரிமாற்றத்தின் மூலம் ஈட்டுகின்ற பணமே வருவாய் எனப்படும்.
- ♦ உற்பத்தியாளர் தான் உற்பத்தி செய்த பண்டத்தை ஒரு குறிப்பிட்ட விலையில், சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற வருமானமே அந்நிறுவனத்தின் வருவாய் எனப்படும்.

**24.** நீர்மை விருப்பம் என்பது மக்கள், பத்திரங்கள், பங்குகள், மாற்றுச்சீட்டுகள், நிலம், கட்டிடம், தங்கம் போன்றவைகளாக அல்லாமல் ரொக்க பணமாக கையில் வைத்திருக்க விரும்புவதே ஆகும்.

**25.** முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது ஆகும்.

**26.** குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். இந்த நிதிச்சேவையானது கடன்கள், சேமிப்புகள், தொழில் முனைவோர்க்கான காப்பீடு வசதிகள், பாரம்பரிய மூலதன ஆதாரம் இல்லாத சிறு தொழில் முனைவோர் ஆகியோர்க்கு வங்கி அல்லது முதலீட்டாளர் போல செயல்படுவதாகும்.

**27.** சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும். நாகப்பட்டினம் நடுத்தர துறைமுகமாகும்.

**28.**
- ♦ ஒரு நாட்டின் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள் எனப்படும்.
- ♦ **உதாரணம் :** காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல்கள் ஆகியன.

**29.** ஊரக மின்மயமாக்கல் என்பது ஊரக பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

**30.** மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகியவை தமிழ்நாட்டுக்கேற்ற உணவுப் பயிர்கள் ஆகும்.

www.Padasalai.Net www.surabooks.com

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

https://t.me/... www.Padasalai.Net
https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



## பகுதி - III

**31. பணிகளின் இயல்புகள்:**

- **கண்ணுக்குப் புலனாகாதவை :** புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்டங்களோடு தொடர்புடையவை. (எ.கா.) அடையாள குறியீடு, நிறுவன நன்மதிப்பு.
- **பலதரப்பட்டவை :** பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன. (எ.கா.) இசை மற்றும் மருத்துவர் சேவை.
- **பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது :** பணிகள் அவற்றை செயல்படுத்துபவருக்கே உரியவை. (எ.கா) உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.
- **அழியக்கூடியவை :** பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது. (எ.கா.) மட்டை பந்து விளையாட்டை காண வழங்கப்பட்ட கட்டண விலை விளையாட்டு முடிந்த பிறகு பயன்தராது.

**32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் :**

- சமநோக்கு வளைகோடு கீழ்நோக்கிய சரிவைக் கொண்டது.
- சமநோக்கு வளைகோடுகள் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
- சமநோக்கு வளைகோடு ஒன்றையொன்று வெட்டிக்கொள்ளாது.
- சமநோக்கு வளைகோடுகள் X அச்சையோ Y அச்சையோ தொடாது.


**33. (அ) உற்பத்தியாளர் சமநிலை :**

- உற்பத்தியாளர் சமநிலை என்பது ஒரு குறிப்பிட்ட நிலையில் உற்பத்தியாளர் உச்சபட்ச உற்பத்தியை அடையும் நிலையாகும்.
- இது உற்பத்திக் காரணிகளின் உத்தம அளவு எனவும் அழைக்கப்படுகிறது.

**(ஆ) காரணிகளின் உத்தம அளவு குறிப்பிடுவது:**

- குறிப்பிட்ட அளவு உள்ளிடுகளைக் கொண்டு அதிக பட்ச உற்பத்தியைப் பெறுவது.
- குறைந்த செலவில், குறிப்பிட்ட உற்பத்தியைப் பெறுவது.

**உற்பத்தியாளர் சமநிலை**




**(இ) வரைபட விளக்கம் :**

- E என்ற புள்ளியில் உற்பத்தியாளர் அதிக அளவு இலாபத்தை பெறுகிறார்.
- அந்த புள்ளியில் சம அளவு உற்பத்திக் கோட்டினை சம அளவு செலவுக் கோடு தொட்டுச் செல்லும். அங்கு இரண்டு கோடுகளின் சாய்வும் சமமாக இருக்கும்.
- $MRTS_{LK} = \frac{P_L}{P_K}$
- E என்ற புள்ளியில் நிறுவனம் OM அலகு உழைப்பையும் ON அலகு மூலதனத்தையும் பயன்படுத்துகிறது.
- உயர் சமசெலவுக் கோடுகளில் அமைந்துள்ள H, K, R மற்றும் S புள்ளிகள் அதிக செலவினங்களையும், உற்பத்தியாளர் அடைய இயலாத நிலையையும் குறிக்கின்றன.

**34.**
- தமிழ்நாடு இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளித்துறை உற்பத்தி மையமாகும்.
- தமிழ்நாடு இந்தியாவின் 'நூல் கிண்ணம்' என அழைக்கப்படுகிறது.
- இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் 41 விழுக்காடு நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com PH: 9600175757 / 8124301000

https://t.me/Padasalai www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



- 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% பங்களிப்பையும், மொத்த ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளித்துறையிலிருந்து கிடைக்கிறது.
- உற்பத்தித் துறையில் 14% பங்களிப்பு ஜவுளித்துறை மூலமாக கிடைக்கப் பெறுகிறது.
- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்கள் ஜவுளிஆலைகளுக்கு புகழ் வாய்ந்தவை.
- பின்னலாடைகளின் நகரம் என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பளவில் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்கிறது.

**35.** **நிறைவுப் போட்டிக்கும் முற்றுரிமைப் போட்டிக்கும் உள்ள ஒற்றுமைகள்:**

| வ. எண் | இயல்புகள் | நிறைவுப்போட்டி | முற்றுரிமைப் போட்டி |
|---|---|---|---|
| 1. | உற்பத்தியாளர்கள் / விற்பனையாளர்கள் | எண்ணற்றவர்கள் | அதிகம் |
| 2. | உற்பத்தியின் தன்மை | ஓரியல்பானவை. முழுமையான பதிலீட்டுப் பண்டம் | பல்வேறுவிதமான பண்டம் (நெருங்கிய பதிலீட்டுப் பண்டம்) |
| 3. | விலை மீது கட்டுப்பாடு | அங்காடி விலையை ஏற்பவர்கள் | முத்திரை அங்கீகாரம் மூலம் ஓரளவு கட்டுப்பாடு |

**36.** கூலி நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

(i) **பெயரளவுக் கூலி அல்லது பணக்கூலி :**

பெயரளவுக்கூலி என்பது ரொக்கமாக (பணமாக) வழங்கப்படும் கூலியைக் குறிக்கும்.

(ii) **உண்மைக்கூலி :**

- பண்டங்களாகவோ, பணிகளாகவோ கூலியை வழங்குவது உண்மைக்கூலி எனப்படும்.
- பணக்கூலியின் வாங்கும் திறனே உண்மைக்கூலி ஆகும்.

(iii) **துண்டுக்கூலி :**

முடிக்கப்பட்ட வேலையின் அளவின் அடிப்படையில் வழங்கப்படுவதாகும்.

(iv) **நேரக்கூலி :**

உழைப்பாளி உழைக்கின்ற நேரத்தின் அளவைப் பொருத்து வழங்கப்படும் கூலி ஆகும்

**37.**
- செய்திறன் குறியீட்டெண்ணை (PQLI) மோரிஸ் டி மோரிஸ் உருவாக்கினார்.
- இது ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப் பயன்படுகிறது. இதற்காக அவர் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு வீதம், எழுத்தறிவு வீதம் ஆகிய மூன்று குறியீடுகளைப் பயன்படுத்தினார்.
- ஒவ்வொரு குறியீட்டெண்ணின் அளவும் 1 லிருந்து 100 வரையிலான எண்களுக்குள் இருக்கும்.
- எண் 1 என்பது ஒரு நாட்டின் மோசமான செயல்பாட்டைக் குறிக்கும்.
- 100 என்பது மிகச்சிறப்பான செயல்பாட்டைக் குறிக்கும்.

**38.**
- பழங்களின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில், மிகப் பெரிய உற்பத்தியாளராகவும், காய்கறிகள் உற்பத்தியில் இரண்டாவது மிகப் பெரிய உற்பத்தியாளராகவும் விளங்குகிறது.
- இருந்த போதிலும், அறுவடைக்குப் பின்னால் ஏற்படும் 25% முதல் 30% வரையிலான இழப்புகளினால், தனியொருவருக்குக் கிடைக்கக் கூடிய பழங்களின் காய்கறிகளின் அளவு மிகக்குறைவாகவே உள்ளது.
- அது தவிர நுகர்வோரை அடையும் நேரத்தில் பண்டத்தின் தரம் கனிசமான அளவில் குறைகிறது. விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்களையும் காய்கறிகளையும் அங்காடிப்படுத்துவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.
- இது அதிக வணிகச் செலவுகள், அங்காடிகளில் தேக்கம், விலையில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பல சிக்கல்களுக்கும் காரணமாக அமைகிறது.
- இந்த சிக்கல்களைத் தீர்க்க, இந்திய அரசும் வேளாண் அமைச்சகமும், 1955 ஆம் ஆண்டு "குளிர்பதன கிடங்கு ஆணை 1964" என்பதை ஏற்படுத்தியது.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/Padasalai www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**39. பொருளியலில் கணித முறையின் பயன்கள் :**

- பொருளியல் சிக்கல்களை மிகவும் சுருக்கமான வடிவில் வழங்கிட கணித முறைகள் துணைபுரிகின்றன.
- பொருளியல் கருத்துகளை விளக்கிட கணித முறைகள் உதவுகின்றன.
- பொருளியல் ஆய்வில் அதிக எண்ணிக்கையிலான மாறிகளை பயன்படுத்த கணித முறைகள் உதவுகின்றன.
- அரசாங்கமோ, எந்த ஒரு அமைப்போ நடைமுறைப்படுத்தும் பொருளியல் செயல்பாடுகளின் தாக்கம் (அல்லது) விளைவுகளை அளவிட கணித முறைகள் பயன்படுகின்றன.

**40. வேலையின்மைக்கான தீர்வுகள்,**

(1) **துணைத் தொழில்கள் :**

- பருவகால வேலையின்மையைத் தவிர்க்க ஊரக மக்களை, துணைத் தொழில்களைத் தொடங்குவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.
- கடன் வசதிகளை ஏற்படுத்திதர வேண்டும்.

(2) **ஊரக வேலைத்திட்டம் :**

வேலையற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.

(3) **நீர்ப்பாசன வசதிகள் :**

போதிய மழையளவு இல்லாததால், நீர்ப்பாசன வசதியினைப் பயன்படுத்தி பலவகைப் பயிர்களை பயிர் செய்யும் முறையினைக் கையாள வேண்டும்.

(4) **ஊரக தொழில் மயமாக்கல் :**

வேலை வாய்ப்பினை உருவாக்க ஊரகப் பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

(5) **தொழில்நுட்பக்கல்வி :**

இளைஞர்களை சொந்தமாகத் தொழில் தொடங்க வழிவகை செய்ய வேண்டும்.

## பகுதி - IV

**41. (அ)**

| வ. எண் | நுண்ணியல் பொருளியல் | பேரியல் பொருளியல் |
|---|---|---|
| 1 | தனிப்பட்ட பொருளாதார முகவர்களான உற்பத்தியாளர், நுகர்வோர் எடுக்கும் பொருளாதார முடிவுகளை விளக்குவது நுண்ணியல் பொருளியல் பிரிவு. | இந்த பிரிவு முழுப் பொருளாதாரத்தின் முழுத் தொகுதியையும் ஆராயும் பகுதிகள் கொண்டது. (எ.கா) மொத்த உற்பத்தி, தேசிய வருவாய், மொத்த சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியன. |
| 2 | பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. | நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| 3 | இப்பிரிவு தனியொரு பண்டம் மற்றும் காரணியின் விலை எவ்வித முறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. | இது பொருளாதாரத்தின் பொது விலை நிலையோடு தொடர்புடையது. |
| 4 | இது விலைக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. | இது வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |
| 5 | தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரது உத்தம அளவு குறிக்கோளுடன் தொடர்பு உடையது. | இது வளர்ச்சி முறையின் உத்தம அளவுடன் தொடர்புடையது. |

**(அல்லது)**

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

**(ஆ)** (i) **இரும்புத் தாது :**

- இந்தியாவில் உயர்தரமான இரும்புத்தாது மிக அதிகமாகக் காணப்படுகிறது.
- இரும்பு தாது 14,630 மில்லியன் டன், மேக்னடைட் இரும்புத்தாது 10,619 மில்லியன் டன் இருப்பு உள்ளது.
- ஹேமடைட் இரும்புத்தாது அதிகமாக சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.
- கேரளா, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசங்களிலும் சில இடங்களில் இரும்புத்தாது காணப்படுகிறது.

(ii) **நிலக்கரியும் பழுப்பு நிலக்கரியும் :**

- பூமிக்கு அடியில் அதிகமாக கிடைக்கக் கூடிய கனிமங்களில் நிலக்கரி முக்கியமானதாகும்.
- சீனாவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அடுத்தபடியாக நிலக்கரி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது.
- மேற்கு வங்காளம், பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா, ஆந்திர பிரதேசம் நிலக்கரி கிடைக்கக் கூடிய முக்கிய மாநிலங்களாகும்.

(iii) **அலுமினியத்தாது (பாக்சைட்) :**

- பாக்சைட் – அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது ஆகும்.
- ஒடிசா கிழக்குக் கடற்கரையிலும், ஆந்திரப் பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

(iv) **மைக்கா :**

- மைக்கா ஒரு வெப்பத்தைத் தடுக்கும் கனிமமும், அரிதிற் மின் கடத்தியும் ஆகும்.
- இந்தியா உலக வணிகத்தில் 60% பங்குடன், மைக்கா தாள் உற்பத்தியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- பெக்மடைட் எனப்படும் மைக்கா வகை ஆந்திர பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார், ராஜஸ்தானில் கிடைக்கிறது.

(v) **சுத்திகரிக்கப்படாத எண்ணெய் :**

- இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் குஜராத்தின் பல இடங்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படுகிறது.
- டிக்பாய், பாடர்பூர், நாகர்காட்டிகா, காசிம்பூர், பள்ளியரியா, ருத்ராபூர், சிவசாகர், மாரன், காம்பே வளைகுடா, அங்கலேஸ்வர் மற்றும் காலோல் ஆகியவை முக்கியமான எண்ணெய் வளங்கள் உள்ள இடங்களாகும்.

(vi) **தங்கம் :**

- இந்தியா குறைந்த அளவே தங்க வளம் இருப்பு பெற்று விளங்குகிறது.
- மூன்று முக்கிய தங்கச் சுரங்கப் பகுதிகள் உள்ளன.
- கோலார் மாவட்டத்தில் கோலார் தங்க வயல் சுரங்கத்திலும், ரெய்ச்சூரில் ஹட்டி தங்க வயல் சுரங்கத்திலும், அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள ராம்கிரி தங்க வயல் சுரங்கத்திலும் ஓரளவு தங்கம் கிடைக்கிறது.

(vii) **வைரம் :**

- UNECE அறிக்கையின் படி நாடு முழுவதிலும் 4,582 ஆயிரம் காரட் வைரங்கள் கிடைக்கின்றன.
- அதிகமாக மத்தியபிரதேசத்தின் பன்னாவிலும், ஆந்திரபிரதேசத்தில் கர்னூல் மாவட்டம் ராமல்ல கோட்டா போன்ற இடங்களிலும் கிருஷ்ணா நதியின் படுகையிலும் கிடைக்கிறது.
- புதிதாக ராய்பூர் இம்பெர்லி சுரங்கம் ராஜ்பூர், சட்டீஸ்கரிலுள்ள பாஸ்டர் மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஒடிஷாவின் நியுபடா, பார்கர் மாவட்டம், மத்தூர் கிருஷ்ணா பகுதி, கர்நாடகாவின் குல்பர்ஹா மாவட்டத்தில் ரெய்சூர் ஆகியவை வைரம் கிடைக்கக்கூடிய மற்ற இடங்களாகும்.

**42. (அ)** விலைத் தேவை நெகிழ்ச்சியை மூன்று வகைகளில் அளவிடலாம்.

- **விழுக்காட்டு முறை :**

**(1)** $E_P = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$

**(2)** இது விகிதாசார முறை என்றும் அழைக்கப்படுகிறது.



www.Padasalai.Net

https://t.me/Padasalai www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



(3) விகிதாச்சார முறையில்

$$E_P = \frac{\%\Delta Q}{\%\Delta P}$$

இதில் $\%\Delta Q$ என்பது தேவையில் ஏற்படும் சதவீத மாற்றம் $\%\Delta P$ என்பது விலையில் ஏற்படும் சதவீத மாற்றம்.

♦ **மொத்தச் செலவு முறை :**

நுகர்வோரின் மொத்தச் செலவில் ஏற்படும் மாற்றத்தையோ அல்லது நிறுவனத்தின் மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தையோ அளவிடுவதன் மூலம் தேவையானது நெகிழ்ச்சி உள்ளதா நெகிழ்ச்சியற்றதா என்பதை எளிய முறையில் அறியமுடியும் என மார்ஷல் குறிப்பிடுகிறார்.

மொத்த வருவாய் = விலை × விற்பனை அளவு

$$TR = P \times Q$$


**மொத்தச் செலவு / ஒதுக்கீட்டு முறை**

| விலை | தேவை அளவு | மொத்த ஒதுக்கீடு | நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 150 | 3 | 450 | |
| | e > 1 | | |
| 125 | 4 | 500 | |
| | e = 1 | | |
| 100 | 5 | 500 | |
| | e < 1 | | |
| 75 | 6 | 450 | |

விலைக்கும் மொத்தச் செலவிற்கும் எதிர்மறை உறவு இருக்குமெனில் இங்கு தேவை நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்.

♦ **புள்ளி அல்லது வடிவியல் முறை :**

நேர் தேவைக் கோட்டில் குறிப்பிட்ட புள்ளியினுடைய வலப்பகுதியை இடப்பகுதியால் வகுக்கக் கிடைக்கும் விகிதத்தைக் கொண்டு புள்ளிமுறையில் நெகிழ்ச்சியை அளவிடலாம்.




$$\text{புள்ளி நெகிழ்ச்சி} = \frac{\text{தேவைக் கோட்டில் புள்ளிக்கு கீழ்ப் பகுதியின் அளவு(வலது பகுதி)}}{\text{தேவைக் கோட்டில் புள்ளிக்கு மேல் பகுதி(இடது பகுதி)}}$$

$$e_p = \frac{L}{U} = \frac{\text{கீழ்பகுதி}}{\text{மேல்பகுதி}}$$

**(அல்லது)**

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/Padasalai Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



(ஆ) ♦ பிரிட்டன் நாடு, இந்தியாவைக் காலனி ஆதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகளுக்கும் மேலாக சீரழித்து வந்தது.

♦ காலனி ஆதிக்க சிதைப்பின் அடிப்படையில் முழு காலத்தையும் வரலாற்றுப் பொருளியல் வல்லுநர்கள் மூன்று கட்டங்களாகப் பிரித்தனர். அவை,

(1) வணிக மூலதனக் காலம்.

(2) தொழில் மூலதனக் காலம்.

(3) நிதி மூலதனக் காலம்.

(1) **வணிக மூலதனக் காலம் :**

♦ 1757 லிருந்து 1813 வரையிலான காலம் வணிக மூலதனக் காலம் ஆகும்.

♦ ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் முக்கிய நோக்கம் இந்திய, கிழக்கிந்தியப் பொருட்களை முற்றுரிமையாக வணிகம் செய்து இலாபம் ஈட்டுவதேயாகும்.

♦ பிரிட்டனில் தொழில் மூலதனத்தை முன்னேற்ற, இந்தியா ஒரு மிக முக்கியமான சுரண்டல் பிரதேசமாக கிழக்கிந்தியக் கம்பெனி கருதியது.

♦ எல்லாவற்றிற்கும் மேலாக இந்நிறுவனத்தின் அலுவலர்கள் அனைவரும் நேர்மையற்று, ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர்.

(2) **தொழில் மூலதனக் காலம் :**

♦ 1813 முதல் 1858 வரையிலான காலம் தொழில் மூலதனக் காலமாகும்.

♦ பிரிட்டிஷ் துணிமணிகளின் சந்தையாக இந்தியா விளங்கியது.

♦ இந்தியாவிலிருந்து மலிவு விலையில் பெறப்பட்ட கச்சாப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு முழுமை பெற்ற பொருட்கள் இந்தியாவிற்கு அதிக விலையில் இறக்குமதி செய்யப்பட்டன.

♦ இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன.

(3) **நிதி மூலதனக் காலம் :**

♦ 19ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலிருந்து விடுதலை அடைந்த காலம் வரை மூன்றாவது கட்டமான நிதி மூலதனக் காலமாகும்.

♦ இக்கால கட்டத்தில் மேலாண்மை முகமை நிறுவனங்கள், ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள், செலாவணி மாற்று வங்கிகள் சில மூலதன ஏற்றுமதிகள் ஆகியவற்றில் நிதி ஆதிக்கம் தொடங்கியது.

♦ இந்திய மூலதனத்தைக் கொள்ளையடித்து இந்தியாவில் இருப்புப் பாதை, சாலை வசதிகள், அஞ்சலகத்துறை, பாசனம், ஐரோப்பிய வங்கி முறை, கல்வி ஆகிய குறிப்பிட்ட பகுதிகளில் பெரிய அளவில் முதலீடு செய்ய பிரிட்டன் முடிவு செய்தது.

♦ பிரிட்டன் இரயில்வே கட்டமைப்புக் கொள்கையானது கற்பனை செய்ய முடியாத பொருளாதாரப் பயனில்லாக் கொள்கையாகும்.

**இந்தியக் கைவினைப் பொருட்கள் நசிவுக் காலம்:**

♦ இந்தியக் கைவினைப் பொருட்களுக்கு உலக அளவில் மிகுந்த வரவேற்பு இருந்தது.

♦ பாகுபாடான சுங்க வரிக் கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே இந்தியக் கைவினைப் பொருட்களை அழித்தது.

**43. (அ) பொருளாதார சிக்கனம் :**

பொருளாதார சிக்கனம் என்பது உற்பத்திக்காரணிகளைப் பயன்படுத்தும் விகிதம் அதிகரிக்கப்படுவதால் வரும் நன்மையாகும்.

பொருளாதார சிக்கனம் இரு வகைப்படும் :

(1) அகச் சிக்கனங்கள்

(2) புறச் சிக்கனங்கள்

**(1) அகச்சிக்கனங்கள் :**

♦ அகச்சிக்கனம் என்பது ஒரு நிறுவனம் பொருளின் உற்பத்திச் செலவினைக் குறைத்து பெறும் நன்மையினைக் குறிக்கும்.

www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



- ♦ நிறுவனமானது புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதாலும் புதிய முதலீட்டை உருவாக்குவதாலும் மேலாண்மைத் திறனை மேம்படுத்துவதாலும் உற்பத்திச் செலவினைக் குறைக்கிறது.

**(அ) தொழில்நுட்ப சிக்கனங்கள் :**

- ♦ தொழில் நுட்ப சிக்கனங்கள் என்பது நிறுவனத்தின் பெரிய அளவாக இருப்பதால், கிடைக்கும் மூலதனமும் அதிகமாக இருக்கும்.
- ♦ ஒரு நிறுவனம் நவீன நுட்பங்களைப் புகுத்த முடியும்.

**(ஆ) நிதிச் சிக்கனங்கள் :**

- ♦ பெரிய நிறுவனங்கள் சந்தையில் பங்கு விற்பனை மூலம் மூலதனப் பெருக்கத்தை ஏற்படுத்தலாம்.
- ♦ ஆனால் சிறிய நிறுவனங்கள் எளிதாகப் பங்கு விற்பனையைச் செய்ய இயலாது.

**(இ) மேலாண்மை சிக்கனங்கள் :**

- ♦ பேரளவு உற்பத்தி வேலைப்பகுப்பு முறைக்கு உதவுகிறது. இதன் மூலம் சரியான வேலையாட்கள் சரியான துறையில் இருப்பார்கள்.

**(ஈ) உழைப்புச் சிக்கனங்கள் :**

- ♦ பேரளவு உற்பத்தி வேலை பகுப்பு முறைக்கு வழிவகுக்கிறது. இதனைச் சிறப்பு உழைப்பு எனலாம்.
- ♦ இது உழைப்பின் தரம் மற்றும் திறனை அதிகரிக்கும்.

**(உ) சந்தை சார்ந்த சிக்கனங்கள் :**

- ♦ பேரளவு உற்பத்தியின் காரணமாக மூலப்பொருட்களை குறைந்த விலைக்கு வாங்க இயலும்.
- ♦ தொலைதூர சந்தையில் பொருட்களை விற்க முடியும்.

**(ஊ) சந்தையில் தொடர்ந்திருப்பதன் சிக்கனங்கள்:**

- ♦ பெரிய நிறுவனங்கள் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யலாம்.
- ♦ உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளின் சந்தையில் தோல்வியுற்று இழப்பு ஏற்பட்டாலும் வேறொரு பொருளின் இலாபத்தினால் இழப்பினை ஈடு செய்ய முடியும்.

**(2) புறச்சிக்கனங்கள் :**

- ♦ புறச் சிக்கனங்கள் என்பது நிறுவனத்திற்கு வெளியே ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தியின் முறைகளில் ஏற்படும் மேம்பாடுகளைக் குறிக்கும்.
- ♦ ஒரு நிறுவனம் மட்டும் பெறும் நன்மை அல்லாது அனைத்து நிறுவனங்களும் பெறும் பயனாகும்.

**முக்கியமான புறச்சிக்கனங்கள் :**

- ♦ மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்.
- ♦ வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்.
- ♦ நகரியல் வளர்ச்சி.
- ♦ தகவல் மற்றும் தொலைத் தொடர்பு வளர்ச்சி.

**(அல்லது)**

**(ஆ) ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 - 2020):**

ஏற்றுமதிச் சூழல்களை மேம்படுத்துதல், உற்பத்தி அதிகரிப்பு மற்றும் "இந்தியாவில் தயாரிப்பு", "மின்னனு இந்தியா" முதலான திட்டங்களுக்கு ஆதரவளித்தலே இக்கொள்கையின் முதன்மையான நோக்கமாகும்.

**சிறப்பியல்புகள் :**

- ♦ ஏற்றுமதி உதவிகளை 25 விழுக்காடு அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் "இந்தியத் தயாரிப்பு" என்ற கருத்து உருவாக்கப்பட்டது.
- ♦ ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர் தன்விவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் ஒப்படைக்க வேண்டிய அவசியமில்லை.

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net


https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



- டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரிதாக்கல், முத்திரைத் தாள் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றிற்கான கைபேசி செயலி மற்றும் பட்டயக் கணக்காளர், கணக்குக்காசாளர் ஆகியோரால் மின்னனு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன.
- பாதுகாப்பு, இராணுவக்கிடங்கு, விண்வெளி மற்றும் அணு ஆற்றல் முதலானவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்.
- தற்போது உலக வர்த்தகத்தில் 3% ஆக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020 ஆம் ஆண்டுக்குள், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை இருமடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**44. (அ)**

**மொத்த மாறாச் செலவு (TFC) :**





- மாறாத உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மொத்த மாறாச் செலவாகும்.

**மொத்த மாறும் செலவு (TVC) :**




- மாறும் உற்பத்திக் காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மொத்த மாறும் செலவாகும்.
- உற்பத்தி அதிகரிக்கும்போது மாறும் செலவும் அதிகரிக்கிறது.

**மொத்தச் செலவு (TC) :**





- ஓர் உற்பத்தியில் ஏற்படுகின்ற பல்வேறு செலவுகளின் மொத்த கூடுதல் அந்நிறுவனத்தின் மொத்தச் செலவு எனப்படுகிறது.
- மொத்தச் செலவு என்பது மொத்த மாறாச் செலவையும் (TFC), மொத்த மாறும் செலவையும் (TVC) உள்ளடக்கியதாகும்.

மொத்தச் செலவு = மொத்த மாறாச் செலவு + மொத்த மாறும் செலவு

$$TC = TFC + TVC$$

**சராசரி மாறாச் செலவு (AFC) :**




- சராசரி மாறாச் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறாச் செலவு என்பதாகும்.
- சராசரி மாறாச் செலவு என்பது, மொத்த மாறாச் செலவு, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்கக் கிடைக்கும் ஈவுத் தொகையாகும்.

$$AFC = \frac{TFC}{Q}$$

இதில் AFC = சராசரி மாறாச் செலவு

TFC = மொத்த மாறாச் செலவு Q = உற்பத்தி அலகுகள்


www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**சராசரி மாறும் செலவு (AVC) :**




- சராசரி மாறும் செலவு என்பது உற்பத்தியின் ஒரு அலகிற்கான மாறும் செலவைக் குறிக்கும்.
- இது மொத்த மாறும் செலவை உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையால் வகுக்கக் கிடைக்கும் ஈவு ஆகும்.


$$AVC = \frac{TVC}{Q}$$

இதில், AVC = சராசரி மாறும் செலவு

TVC = மொத்த மாறும் செலவு Q = உற்பத்தி அளவு

- சராசரி மாறும் செலவு வளைகோடு 'U' வடிவத்தில் உள்ளது

**சராசரி மொத்தச் செலவு (ATC) அல்லது சராசரி செலவு (AC) :**




- சராசரி செலவு என்பது ஒரு பண்டத்திற்கான செலவு எனப்படும்.
- சராசரி மொத்தச் செலவு என்பது மொத்தச் செலவை, உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுப்பதால் கிடைப்பதாகும்.


$$ATC = \frac{TC}{Q} \quad \text{அல்லது} \quad ATC = AFC + AVC$$

இதில் ATC = சராசரி மொத்தச் செலவு

AFC = சராசரி மாறாச் செலவு

AVC = சராசரி மாறும் செலவு

**இறுதிநிலைச் செலவு (MC) :**




- இது கடைசியாக உற்பத்தி செய்த ஒரு பண்டத்திற்கான செலவு.
- இறுதிநிலைச் செலவு என்பது மொத்தச் செலவில் ஏற்படும் மாற்றத்தை குறிக்கிறது.
- அதாவது கூடுதலாக ஓர் அலகுப் பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்தச் செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படுகிறது.

$$MC = \Delta TC / \Delta Q \quad \text{அல்லது} \quad MC_n = TC_n - TC_{n-1}$$

**(அல்லது)**

**(ஆ) ஊரகக் கடன் சுமை :**

ஊரக கடன்சுமை என்பது கிராம மக்கள் குறிப்பிட்ட காலத்தில் வாங்கியக் கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் கடனின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

**ஊரக கடன்களுக்கான காரணங்கள் :**

(1) **உழவர்களின் ஏழ்மை நிலை :**

- வறுமையில் நுகர்விற்காகவும், வேளாண்மைத் தொழிலை மேற்கொள்வதற்காகவும், குடும்ப விழாக்களுக்காகவும் உழவர்கள் கடன் பெறத் தூண்டப்படுகிறார்கள்.
- ஏழ்மை நிலை கடன், கடனுக்கான அதிக வட்டி முதலியன உழவர்களைக் கடன் கொடுப்பவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன.

(2) **பருவமழை பொய்த்தல் :**

- அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவது உழவர்களுக்கு சாபமாக அமைகிறது.
- வேளாண்மை எப்போது சிறக்கும், கடன்களை அடைக்கலாமென அவர்களால் கணிக்க முடியவில்லை.

www.Padasalai.Net

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



(3) **வழக்குகள் :**

- நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள்.
- அவர்களின் கல்வியறிவின்மையாலும், அறியாமையாலும் வழக்குகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு அவர்களின் சேமிப்புச் சொத்துக்களும் அழிக்கப்படுகின்றன.

(4) **வட்டிக்குக் கடன் தருவோர், அதிக வட்டி வீதம்:**

உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல், அசலுடன் வட்டியைச் சேர்த்து அதிகரித்துக்கொண்டே செல்வதால் உழவர்கள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது.

**45. (அ)** சில்லோர் முற்றுரிமை அங்காடியில் சில நிறுவனங்கள் ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும்.

**சில்லோர் முற்றுரிமையின் பண்புகள் :**

- **சில பெரிய நிறுவனங்கள் :**

  சில பெரிய நிறுவனங்களே அங்காடி முழுவதிலும் உற்பத்தியையும் தேவையையும் கட்டுப்படுத்தும்.

- **நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல் :**

  ஒரு நிறுவனத்தின் விலையையும் உற்பத்தி அளவையும் நிர்ணயிக்கும் முடிவுகள் போட்டி நிறுவனம் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்து அமையும்.

- **குழுச் செயல்பாடு :**

  சில்லோர் முற்றுரிமை நிறுவனங்கள் அனைத்தும் தமக்குள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கும்.

- **விளம்பரச் செலவு :**

  சில்லோர் முற்றுரிமையாளர், விளம்பரம் அல்லது உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தி தனது விற்பனையை அதிகரிப்பார்.

- **பண்டத்தின் தன்மை :**

  நிறைவு சில்லோர் முற்றுரிமை என்பது ஒரே விதமான பண்டம் உற்பத்தி செய்வதையும், நிறைகுறை சில்லோர் உற்பத்தி என்பது பலவிதமான பண்டங்கள் உற்பத்தி செய்வதையும் குறிக்கும்.

- **மாறாத விலை :**

  விலையை மாற்றி அமைப்பது என்பது இந்த அங்காடியில் கடினம். சில்லோர் முற்றுரிமையில் விலையை மாற்றாமல் இருப்பதற்கு காரணம் எதிராளிகளின் போட்டி பற்றிய அச்சமாகும்.

**(அல்லது)**

**(ஆ)** 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவிலுள்ள 121 கோடி மக்கள் தொகையில் 7.21 கோடி மக்கள் தொகையுடன் தமிழ்நாடு ஆறாவது இடத்தில் உள்ளது.

**பாலின விகிதம் (1000 ஆண்களுக்கான பெண்களின் எண்ணிக்கை) :**

- சமச்சீர் பாலினவிகிதம் என்பது பெண்கள் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதைக் குறிக்கிறது.
- தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும்.
- பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போதும் இந்திய அளவிலும் இந்த விகிதம் மிக அதிகமாகும்.

**குழந்தை இறப்பு விகிதம் :**

- தமிழகத்தில் குழந்தைகளின் இறப்பு வீதம் மற்ற மாநிலங்களைவிட குறைவாக உள்ளது.
- நிதி ஆயோக் அறிக்கையின்படி 2016 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் குழந்தை இறப்பு விகிதம் 17 ஆகும்.

**மகப்பேறு இறப்பு விகிதம் :**

மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு 79 எண்ணிக்கையுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000 Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் :**

- சராசரியாக ஒருவரின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே ஆயுட்காலம் என்று அழைக்கப்படுகிறது.
- வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும்போது இந்திய மக்களின் சராசரி ஆயுட்காலம் குறைவு.
- தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகள் (ஆண் - 68.6, பெண் 72.7) ஆக உள்ளது.

**எழுத்தறிவு நிலை :**

தமிழ்நாட்டின் எழுத்தறிவு மற்ற இந்திய மாநிலங்களோடு ஒப்பிடும்போது முன்னேறிய நிலையில் உள்ளது.

**46. (அ)** வாரம் என்பது நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாததுமான சக்திகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக நிலத்தின் விளைச்சலிலிருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதே ஆகும்.

டேவிட் ரிகார்டோ விளக்கிய வாரக்கோட்பாடு தொன்மைக் கால வாரக் கோட்பாடாகும்.

**அனுமானங்கள் :**

- நிலம் வளத்தில் வேறுபட்டது.
- வேளாண்மையில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுகிறது.
- நிறைவுப் போட்டி நிலவுகிறது.
- நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டது.
- நிலம் உண்மையானதும், அழிக்கமுடியாத சக்திகளையும் கொண்டது.
- அதிக வளமுள்ள நிலங்கள் முதலில் பயிர் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

**எடுத்துக்காட்டுடன் இக்கோட்பாட்டின் விளக்கம் :**

- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தீவில் குறிப்பிட்ட சில மக்கள் குடியேறுவதாக கொள்வோம்.
- அங்கு மூன்று தரமுடைய நிலங்கள் உள்ளன.
- அவை A,B மற்றும் C. A என்பது மிகவும் வளம் பொருந்திய நிலம்.
- A யுடன் ஒப்பிடும்போது B குறைந்த வளம் உடைய நிலம்.
- C என்பது மிகக் குறைந்த வளமுடைய நிலம்.
- நிலம் பயன்படுத்தப்படாமல் மிக அதிகமாக இருப்பதால் அத்தகைய நிலம் இலவசமாக கிடைக்கிறது. அதுவரை வாரம் கிடையாது.
- குறிப்பிட்ட அளவு உழைப்பாளரையும் மூலதனத்தையும் பயன்படுத்துவதால் 'A' தரம் உள்ள நிலத்தில் ஒரு ஏக்கருக்கு 40 மூட்டைகள் நெல் விளைகிறது.
- அடுத்ததாக மற்றொரு சிறிய மக்கள் கூட்டம் அதே தீவில் குடியேறுவதாக கொள்வோம்.
- சில காலத்திற்கு பிறகு B தர நிலத்தை பயிர் செய்ய பயன்படுத்துவார்கள்.
- வளம் குறைந்த 'B' தர நிலத்தின் 30 மூட்டைகள் நெல் விளைவிக்கப்படுகிறது.
- A தர நிலத்தில் ஒரு ஏக்கருக்கு 10 மூட்டைகள் உபரியாக உள்ளது (40 – 30) இதை 'A' தர நிலத்திற்கான பொருளாதார வாரம் என அழைக்கிறோம்.
- இன்னும் ஒரு சிறு மக்கள் கூட்டம் அதே தீவில் குடியேறுகிறது.
- 'C' தர நிலத்தில் 20 மூட்டைகள் நெல் விளைவிக்கப்படுகிறது.
- 'A' தர நிலத்தின் உபரி தற்போது 20 மூட்டைகளாக அதிகரிக்கிறது (40 – 20) இது 'A' தர நிலத்தின் பொருளாதார வாரமாகும் 'B' தர நிலத்தின் உபரி. 10 மூட்டைகளாகும் (30 – 20) இது 'B' தர நிலத்தின் பொருளாதார வாரமாகும்
- 'C' தர நிலத்தின் உற்பத்தி செலவு அதன் உற்பத்தி மதிப்பிற்கு சமமாக உள்ளது. எனவே அதற்கு எந்த ஒரு வாரமும் கிடைக்காது (20 – 20) எனவே 'C' தர நிலங்களை "வாரமில்லா நிலம்" அல்லது இறுதி நிலை நிலம் என அழைக்கப்படுகிறது.
- வாரம் பெறக்கூடிய நிலத்தை உள் இறுதிநிலை நிலம் என்கிறோம்.

www.Padasalai.Net


enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph:8124201000 / 8124301000

www.Padasalai.Net https://t.me/Padasalai
www.CBSEtips.in https://bit.ly/3pspUm0



| நிலத்தின் தரம் | உற்பத்தி (மூட்டைகளில்) | உபரி (வாரம்) (மூட்டைகளில்) |
|---|---|---|
| A | 40 | 40 – 20 = 20 |
| B | 30 | 30 – 20 = 10 |
| C | 20 | 20 – 20 = 0 |

**ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டின் வரைபடம்**




**வரைபட விளக்கம் :**

♦ X அச்சில் நிலத்தின் தரமும் Y அச்சில் ஏக்கருக்கான விளைச்சல் (மூட்டைகளும்) குறிக்கப்படுகிறது.

♦ வரைபடத்தில் C தர நிலங்கள் வாரமில்லா நிலங்கள் எனப்படும்.

♦ A மற்றும் B தர நிலங்கள் பெற்ற "இறுதிநிலை வாரமுள்ளநிலம்" (குறுக்கு வெட்டு நிலம் வரைபடத்தில் கோடிடப்பட்ட பகுதியில் குறிக்கப்பட்டுள்ளது)

**குறைபாடுகள் :**

♦ முதலில் வளம் பொருந்திய நிலம், பின்னர் வளம் குறைந்த நிலம் என்கிற வரிசை வரலாற்றின் அடிப்படையில் தவறானது.

♦ இக்கோட்பாடு வாரமானது விலையில் சேராது என குறிப்பிடுகிறது. ஆனால் வாரமானது விலையுடன் சேர்ந்திருக்கும்.

**(அல்லது)**

**(ஆ)** ♦ பி.ஆர், அம்பேத்கர் (1891 - 1956) ஒரு பன்மதத்திறன் பெற்றவர். அவர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி, சமதர்மக் காவலர், சமூக நீதி பாதுகாவலர் மற்றும் அரசின் திட்டங்களை வடிவமைத்தவர்.

♦ "இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றிய வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை" எனும் இரண்டு நூல்களிலும் அவருடைய பொருளாதார கருத்துகள் காணப்படுகின்றன. மேலும் "பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதிகளின் மதிப்பீடு: மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவலாக்கம் பற்றிய ஓர் ஆய்வு" கட்டுரையாக வெளியிடப்பட்டது.

♦ 1921ல் அபேத்கருடைய பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கல் எனும் ஆய்வுக் கட்டுரை M.Sc பட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 1923இல் 'ரூபாயின் பிரச்சனைகள்' எனும் ஆய்வறிக்கையை ஏற்று லண்டன் பொருளாதார பள்ளி D.Sc பட்டம் வழங்கியது.

♦ ஆச்சரியமான செய்தி என்னவென்றால் இந்திய ரிசர்வ் வங்கியானது அம்பேத்கர் நூலான ரூபாயின் பிரச்சினைகள் அதன் தோற்றமும் அதன் தீர்வும் என்பதில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி கருத்தாக்கம் பெற்றது. அவருடைய பொருளாதார கருத்துகள் நான்கு தலைப்புகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

  ♦ நிதிப்பொருளாதாரம்
  ♦ வேளாண்மைப் பொருளாதாரம்
  ♦ சமூக நீதிப்பொருளாதாரம்
  ♦ சமதருமப்பொருளாதாரம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
enquiry@surabooks.com / Ph:8124201000 / 8124301000

https://t.me/Padasalai.Net www.Padasalai.Net https://bit.ly/3pspUm0 www.CBSEtips.in



**47. (அ)** ♦ அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜுலை 19, 1969 அன்று நாட்டுடமையாக்க முடிவு செய்தது.

♦ 1980 ஆம் ஆண்டில், அரசு மேலும் 6 வணிக வங்கிகளை நாட்டுடமையாக்கியது.

**நாட்டுடமையாக்கலின் நோக்கங்கள் :** பின்வரும் நோக்கங்களை அடைவதற்காக இந்திய அரசு வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

♦ நாட்டுடமையாக்கலின் முதன்மையான நோக்கம் சமூக நலத்தை அடைவதேயாகும்.வேளாண்மை, சிறு தொழில், குடிசைத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நிதி தேவைப்பட்டது.

♦ நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கும், சமூகத்தில் தேவையான பகுதிகளுக்கு இலகுவாகக் கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன.

♦ இந்தியாவில் ஏறத்தாழ 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, கிராமப்புற மக்களிடையே வங்கிச் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.

♦ வங்கி வசதிகள் இல்லாத இடத்தில் வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் உதவுகின்றன.

♦ நாட்டின் விடுதலைக்கு முன் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. நாட்டுடமையாக்கப்பட்ட பிறகு கிராமப்புறங்களிலும் நகர்புறங்களிலும் பல புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்பட்டன.

♦ நாட்டுடமையாக்கப்பட்ட பின் வேளாண்துறைக்கும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கும் தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.

♦ 1991 ஆம் ஆண்டின் புதிய தொழிற்கொள்கைக்குப் பிறகு, இந்திய வங்கித்துறை பன்முகப் போட்டித் திறமை மற்றும் உற்பத்தி திறன் போன்ற பல்வேறு முகங்களை எதிர்நோக்கி வருகிறது.

**(அல்லது)**

**(ஆ) ஜவஹர்லால் நேருவின் பொருளாதாரச் சிந்தனை :**

♦ புதிய இந்தியாவைக் கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ஜவஹர்லால் நேரு ஆவார்.

♦ இந்தியாவின் முதல் பிரதம அமைச்சராவார்.

♦ அவருடைய பொருளாதார கருத்துக்கள், அவர் ஆற்றிய எண்ணற்ற உரையாடல்களிலும், புத்தகங்களிலிருந்தும் தெரிய வந்தது.

(i) **மக்களாட்சியும், மதச்சார்பின்மையும் :**

♦ மக்களாட்சி முறையை உறுதியாக நம்பியவர் ஜவஹர்லால் நேரு.

♦ பேச்சுரிமை, குடிமக்கள் உரிமை, வாக்குரிமை, சட்டத்தின் வழி ஆட்சி மற்றும் பாராளுமன்ற மக்களாட்சி ஆகியவற்றை நம்பியவர்.

♦ மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை அளித்தல் ஆகும் என்கிறார்.

(ii) **திட்டமிடுதல் :**

♦ திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும்.

♦ ஒரு நாட்டின் அணுகுமுறைக்கு, திட்டம் அவசியம் என்று அவர் கருதினார்.

♦ "திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதை குறிக்கும்" என்கிறார்.

♦ திட்டமிடுதல் என்பது தொழில் மயமாதலோடு தொடர்புடையது.

♦ நேரு திட்டமிட்ட வளர்ச்சி பெற இந்த யுக்தியை முன்னெடுக்கிறார்.

♦ "அறிவியல், ஆராய்ச்சி, தொழில் நுட்பம், தொழில் வளர்ச்சி" ஆகியவற்றில் நேருவின் பங்களிப்பு மறக்க முடியாது.

(iii) **ஜனநாயக சமதர்மம் :**

♦ சமதர்மத்திற்கு நேருவின் பங்களிப்பு மிகப்பெரியதாகும்.

♦ நம் இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார்.

❖ ❖ ❖

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000 Kindly send me your study materials to padasalai.net@gmail.com